# ECHO OF HIS CALL

# அழைப்பின் எதிரொலி

Tamil

₹ 10/-

ECHO OF HIS CALL 1969-2019 GOLDEN JUBILEE

REACHING NATIONS

India's National Spiritual Newspaper

Published monthly in ENGLISH, TAMIL, MALAYALAM, TELUGU, HINDI, KANNADA, MARATHI, BENGALI, GUJARATI, ODIYA, ASSAMESE, PUNJABI, NEPALI, URDU, SINHALA & AFRIKAN

Editor : S. SAM SELVA RAJ | 16 Languages | Senior Associate Editor: Dr. SERENA BEVIN

Vol. XXVIII | DECEMBER 2023 | No. 12


## பரிசுத்த வேதாகமம்

இப்பகுதியை மனப்பாடம் செய்யவும்

### ஏசாயா 9:1-6

1. ஆகிலும் அவர் செபுலோன் நாட்டையும், நப்தலி நாட்டையும் இடுக்கமாய் ஈனப்படுத்தின முந்தின காலத்திலிருந்ததுபோல அது இருண்டிருப்பதில்லை; ஏனென்றால் அவர் கடற்கரையருகிலும், யோர்தான் நதியோரத்திலுமுள்ள புறஜாதியாருடைய கலிலேயாவாகிய அத்தேசத்தைப் பிற்காலத்திலே மகிமைப்படுத்துவார்.
2. இருளில் நடக்கிற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்; மரண இருளின் தேசத்தில் குடியிருக்கிறவர்களின்மேல் வெளிச்சம் பிரகாசித்தது.
3. அந்த ஜாதியைத் திரளாக்கி, அதற்கு மகிழ்ச்சியைப் பெருகப் பண்ணினீர்; அறுப்பில் மகிழ்கிறது போலவும், கொள்ளையைப் பங்கிட்டுக் கொள்ளுகையில் களிகூருகிறதுபோலவும், உமக்கு முன்பாக மகிழுகிறார்கள்.
4. மீதியானியரின் நாளில் நடந்ததுபோல, அவர்கள் சுமந்த நுகத்தடியையும், அவர்கள் தோளின் மேலிருந்த மிலாற்றையும், அவர்கள் ஆளோட்டியின் கோலையும் முறித்துப் போட்டீர்.
5. அமளியாய் யுத்தம்பண்ணுகிற வீரருடைய ஆயுதவர்க்கங்களும், இரத்தத்தில் புரண்ட உடுப்பும் அக்கினிக்கு இரையாகச் சுட்டெரிக்கப்படும்.
6. நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும்; அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக்கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்தியபிதா, சமாதானப்பிரபு என்னப்படும்.

# சமாதானப்பிரபுவின் பரிசு!

## THE GIFT OF THE PRINCE!

*Rev.* ஏஞ்சலின் செல்வகுமாரி



என் குழந்தைப் பருவத்திலிருந்தே 'கிறிஸ்மஸ்' என் இருதயத்தில் ஒரு சிறந்த இடத்தைப் பிடித்திருந்தது. வர்ணிக்க முடியாத ஒருவித மகிழ்ச்சியை அது எனக்குக் கொண்டு வருகிறது. எனது இளம் வயதிலே, புதிய ஆடைகள் வாங்குவதற்கோ, வீட்டை வண்ண காகிதங்களாலேயோ, விளக்குகளாலேயோ அலங்கரிக்கவோ எங்களிடம் பணம் இல்லாதிருந்தது. ஒரு படுக்கையறையுள்ள ஒரு சிறிய வீட்டில், அளவான ஆகாரத்துடன் வசித்து வந்தோம். இருப்பினும் எங்கள் சிறு பருவத்தை அழகுள்ளதாகவும், அர்த்தமுள்ளதாகவும் எங்கள் பெற்றோர் மாற்றித் தந்தனர். எங்கள் பெற்றோர் எங்களுக்காக எடுத்த முயற்சிகளுக்காக நானும், எனது சகோதரனும் நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம். அது ஒரு அற்புதமான காலம். தாத்தா பாட்டியைச் சந்திக்க செல்லும் நேரங்கள், நெருங்கின உறவினர்களைச் சந்திக்கும் நேரங்கள், தூக்கமயமான கண்களுடன் அதிகாலையில் ஆலயத்திற்குச் செல்லும் நாட்கள். முழு குடும்பமாக இணைந்து அருமையான மதிய உணவைச் சாப்பிடக் காத்திருக்கும் நேரங்கள், விளையாடும் நேரங்கள் மற்றும் என் சகோதரனுடன் குழந்தைத்தனமாக சண்டையிட்ட நேரங்கள் – இவ்வாறாக, இச்சம்பவங்கள் அந்த நாட்களை அழகுப்படுத்தின.

ஒவ்வொரு வருடமும், இப்போதுகூட அந்த மெழுகுத்திரிகளின் வாசனை, பலகாரங்களின் வாசனை, கண்கவரும் அலங்கார விளக்குகள், அந்த குளிர்ந்த காற்று,

தொடர்ச்சி 3-ம் பக்கம்.....


அழைப்பின் எதிரொலி!



கிறிஸ்தவ யூடியூப் சானல்!

போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களுடன் நேரடியாக ஜெபிக்க ஓர் நல்வாய்ப்பு!!

5 நிமிடத்தில் தேவ செய்தியும், ஜெபமும்!!

தமிழ், ஆங்கிலம், இந்தி & தெலுங்கு

தினந்தோறும் - காலை 2.00 மணியில் இருந்து

தமிழ் ஞாயிறு ஆராதனை - காலை 8.30 மணிக்கு

# ECHO OF HIS CALL - (1969-2019 GOLDEN JUBILEE YEAR)



## உங்கள் அன்பு சகோதரனிடமிருந்து...



**OUR MISSION POLICY**

We should expound and teach the contemporary generation the undiluted teachings of the ancient and early Apostles. It is the need of the hour.


**HON. EDITOR-IN-CHIEF**

Rev. Angeline S. Kumari, M.A., M.Sc., M.Ed.

**MANAGING EDITOR**

Pastor Alex Samson Sam, B.Th., M.Div.

**GENERAL MANAGER**

Bro. N. Prakasam, M.A., M.Sc.(C&P), PGDHRM., MBA.

**ADMINISTRATION**

Sis. Jesy Veena Sam
Adv. K. Puratchivendan, M.Com., C.A., B.L.
Dr. P.E.R. Premchand, M.Sc., M.A., M.Ed., Ph.D.
Dr. C.G.S. Baburao, B.Tech., M.Tech. (DM), Ph.D.
Dr. Rabinder Boaz, M.S. (CMC)

**EDITORIAL BOARD**

Dr. Serena Bevin, M.A., M.Phil., B.Ed.
Sis. Sajini Cherian
Sis. L. Mariya Anjalin, M.A., M.Sc., B.Ed.
Rev. Dr. K.R. Rajasekaran

**EDITOR, PUBLISHER & PRINTER**

Pastor S. SAM SELVA RAJ
Echo of His Call Printers
10, Mohammed Abdullah 2nd Street,
Chepauk, Chennai- 600 005, India.
Phone : (+ 91- 44) 2852 8282, 2852 9293, 2854 7766
Cell : (+91) 98410 71852, 98412 71858
95661 31858

**E.MAIL**

sam@echoofhiscall.org
biblecor@yahoo.co.in

**WEBSITES**

www.echoofhiscall.org
www.stpaulsmatriculation.com

**YOUTUBE CHANNEL**

Echo of His Call


என் ஆத்துமா உம்மைத் தொடர்ந்து பற்றிக் கொண்டிருக்கிறது:
உமது வலது கரம் என்னைத் தாங்குகிறது.
- சங்கீதம் 63:8

கர்த்தருக்குள் மிகவும் பிரியமானவர்களே!

நமது ஆண்டவரும், இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவின் ஈடுஇணையற்ற நாமத்தில் உங்களை அன்புடன் வாழ்த்துகிறோம். உங்களுக்கு எங்களின் இனிய கிறிஸ்மஸ் மற்றும் ஆசீர்வதிக்கப்பட்ட புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

### அழைப்பின் எதிரொலி பத்திரிகை மற்றும் யூடியூப் ஊழியங்கள்

நம்முடைய **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை வாசகர்கள் மற்றும் யூடியூப் நேயர்கள் மூலம் எங்களுக்கு வரும் நல்ல செய்திகளுக்காக கர்த்தரை ஸ்தோத்திரிக்கிறோம். இவ்வூழியங்களுக்காக உங்கள் ஜெபங்களை எதிர்பார்க்கிறோம். தினமும் காலை சுமார் 2.00 மணி முதல் ஒளிபரப்பாகும் நமது 5 நிமிட தமிழ் – தெலுங்கு மற்றும் ஆங்கிலம் – இந்தி ஆகிய மொழிகளில் யூடியூப் மூலம் நமது தேவசெய்திகளை நீங்கள் பார்க்க உங்களை ஊக்குவிக்கிறோம். இதற்காக அர்ப்பணிக்கப்பட்ட எங்கள் கைபேசி எண்ணான +91–98410 71858–ஐ உங்கள் கைபேசிகளில் பதிவு செய்து கொள்ளும்படியும், இந்த நமது **Echo of His Call** சானலுக்கு **Subscribe** பண்ணவும் வேண்டுகிறோம். எங்களுடன் தொடர்பு கொள்ள விரும்புபவர்கள் மற்றுமொரு எண்ணான +91–98412 71858–ஐ பதிவு செய்து கொள்ளுங்கள். இந்த சேவை முற்றிலும் இலவசம்.

### சர்வதேச வாலிபர் மற்றும் சிறுவர் நல தரிசனம்
### (Global Vision for Yourth & Kid Care)

உலகம் முழுவதும் உள்ள இளம் ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் ஆகியோர் நல்வாழ்வுக்காக தேவனிடம் **ஒரு நிமிடம் ஜெபிக்கும்படி**யாக **சர்வதேச வாலிபர் மற்றும் சிறுவர் நல தரிசனம் (Global Vision for Youth & Kid Care)** என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தியுள்ளோம். இதில் உலகளாவிய விதத்தில் ஏராளமான நண்பர்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துள்ளனர். **இவர்கள் தினமும் அவரவர் தேச நேரப்படி இரவு 10 மணிக்கு தங்களது கடமையான கீழ்க்காணும் ஒரு நிமிட ஜெபத்தை ஏறெடுக்கிறார்கள். அதாவது,**

**“கர்த்தாவே உலகத்திலுள்ள எல்லா இளம் ஆண்களையும், இளம் பெண்களையும், குழந்தை–களையும் நினைத்தருளும் என்று இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் மூலம் வேண்டுகிறேன். ஆமென்!”** – என்பதாகும்.



**ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுடன்**
**இளம் பிராயத்தினர் மற்றும் குழந்தைகள்**

இதன் பலனாக பல குடும்பங்களில் உள்ள பிள்ளைகள் மனந்திரும்பி கர்த்தருக்குள் சாட்சிகளாக எழும்பி வருகிறார்கள். ஆண்டவர் இயேசுவுக்கே துதியும், கனமும் உண்டாவதாக.

உங்கள் குடும்பங்களில் உள்ள பிள்ளைகளின் பெயர்களை எங்களுக்குத் தெரிவித்தால் அவர்களுடைய பெயர்களைச் சொல்லி ஜெபிக்க ஏதுவாயிருக்கும். இதற்கு பணம் அனுப்ப வேண்டாம்.


Our Ministries: ECHO OF HIS CALL Monthly Magazines (16 languages) • BIBLECOR - Postal Courses (3 languages) • YouTube Ministry • Online Courses • Theological Correspondence Courses (2 languages) • Church Planting • Nehemiah Bible Colleges • Gospel Printing Press • Great Commission Partners • St. Paul's Matriculation School • Crusades • Community Development

நமது ஊழியங்களின் முன்னணியில் நின்று செயல்படும் பலருக்கு உடல்நலக்குறைவுகளும், இழப்புகளும் ஏற்பட்டுள்ளன. நமது ஊழியர்களின் பாதுகாப்பிற்காகவும், நல்ல சுகத்திற்காகவும், நல்ல குடும்ப சூழ்நிலைகளுக்காவும் தயவு செய்து ஜெபியுங்கள்.

இந்த வருடமும் டிசம்பர் மாதம் 31–ம் தேதி இரவு 10.00 மணி முதல் நடைபெறும் புது வருட ஆராதனை online மூலம் நமது யூடியூப் சானலில் ஒளிபரப்பாகும். உங்களுடைய சபை கூடுதலை விட்டு விடாதிருக்கும்படி ஊக்குவிக்கிறோம். உங்கள் சபைகளுக்கு நீங்கள் செல்வது முக்கியம்.

கர்த்தருடைய கிருபையால் வருகிற 02.01.2024 முதல் 06.01.2024 வரை தினமும் காலை 6.00 மணி முதல் 7.00 மணி வரை புதுவருட ஆசீர்வாத ஜெபம் நமது தலைமைச் சபையில் நடைபெறும்.

நமது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையைத் தபால் மூலம் அனுப்பி வருகிறோம். ஆனால் பலருக்கு பத்திரிகைகள் சென்று சேரவில்லை எனத் தெரிகிறது. நமது பத்திரிகைகளை நீங்கள் பெறுவதை உறுதி செய்ய உங்கள் வாட்ஸ் அப் எண்ணையும், ஈமெயில் முகவரியையும் எங்களுக்கு அனுப்புங்கள்.

டிசம்பர் மாதம் தொடர்ந்து பல்வேறு ஊழியங்களை செய்ய ஏற்பாடு செய்துள்ளோம். எல்லா ஊழியங்களும் தடையின்றி நடைபெற ஊக்கமாக ஜெபியுங்கள்.

உங்களுக்கு எங்கள் கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு வாழ்த்துக்கள்!

கிறிஸ்து இயேசுவுக்குள் உங்கள் ஊழியர்கள்,
**போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் & அலெக்ஸ் சாம்சன் சாம்.**
(+91) 98412 71858 / 98410 71858, மின்னஞ்சல் : sam@echoofhiscall.org

... 1–ம் பக்கத் தொடர்ச்சி

இருதயத்தை இதமாக வைக்கும் கிறிஸ்மஸ் பாடல்கள், பழைய நினைவுகளைக் கொண்டு வருவதுண்டு.

சிலருக்கு ‘கிறிஸ்மஸ்’ வேறுவிதமான அனுபவங்களைக் கொண்டு வரலாம். நம்மை விட்டுக் கடந்துபோன நமக்கு அன்பானவர்களின் நினைவுகள் சிலருக்கு வரலாம். சிலர் சரீரத்தில் வியாதிகளுடன் போராடிக்கொண்டிருக்கலாம்; சிலர் பொருளாதார நெருக்கடிக்குள்ளாய்க் காணப்படலாம். சிலர் கிறிஸ்மஸ் காலத்து நிகழ்வுகளில் ஆழ்ந்து, தனிமையிலும், கவலையிலும், மனச்சோர்விலும் காணப்படலாம். தற்கொலையில் ஈடுபடுவோரின் எண்ணிக்கை இக்காலத்தில் அதிகமாக இருக்கிறது என்றும் சொல்லப்படுகிறது.

இவைகளுக்கெல்லாம் மேலாக, ‘கிறிஸ்மஸ்’ டிசம்பர் 25ஆம் நாள் கொண்டாடலாமா, கூடாதா என்று ஒரு விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த தேதியில் கிறிஸ்து பிறக்கவில்லை என்று சிலர் கூறுகிறார்கள். என்னைப் பொறுத்த வரைக்கும், அந்த குறிப்பிட்ட நாள் முக்கியமில்லை. இயேசு இவ்வுலகத்தில் பிறந்தார் என்ற அசைக்கமுடியாத சத்தியமே எனக்கு முக்கியமாக இருக்கிறது. தேவகுமாரன், மனுஷ குமாரனாக இவ்வுலகில் வந்தார் என்ற சத்தியமே முக்கியம்.

எனவே, இந்த தருணத்தைப் பயன்படுத்தி, என் வாழ்வில் நான் பெற்ற மிகப்பெரிய பரிசு ‘இயேசுவின் பிறப்பு’தான் என்று இவ்வுலகத்துக்கு அறிவிக்கிறேன். என் வாழ்க்கையின் சூழ்நிலைகள் எப்படிப் பட்டவையாயிருப்பினும், அந்தப் பண்டிகையை என் குடும்பத்தோடும், நண்பர்களோடும், கொண்டாட விரும்புகிறேன். இந்தக் கொண்டாட்டத்தில், குடும்பம் இல்லாமல் தனிமையில் இருப்பவர்களையும் நெருக்கத்தின் வழியாய்ப் போய்க் கொண்டிருப்பவர்களையும் சேர்த்துக் கொள்ள முயற்சி எடுக்கிறேன். பிறரிடம் அன்பு மற்றும் கரிசனத்தைக் காட்டவும், என்னிடத்திலுள்ளதைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளவும் சரியான நேரம் இதுதான்.

பரிசுகளைக் கொடுப்பதும், பரிசுகளை வாங்குவதும் கிறிஸ்மஸ் காலங்களில் பொதுவாகச் செய்யப்படும் ஒரு காரியம். நம் பிள்ளைகளுக்குப் புதுத்துணி வாங்குவது, நமக்கு அன்பானவர்களுக்கு எதையாவது புதிதாகக் கொடுத்து, நாம் அவர்களை நேசிக்கிறோம் என்றும், அவர்களுக்காக அக்கறை கொள்கிறோம் என்றும், நமது மகிழ்ச்சியை அவர்களுடன் பகிர்ந்து கொள்கிறோம் என்றும் வெளிப்படும்படி செய்கிறோம். மேற்கத்திய நாடுகளில், ஆகஸ்டு மாதத்திலிருந்தே, கிறிஸ்மஸ் பரிசுகளை வாங்க ஆரம்பித்து விடுவார்கள். பரிசுகளை ஒருவருக்கொருவர் வழங்குவது மிக முக்கியமான பழக்கமாக இருப்பதால், சில நாடுகளிலுள்ள மக்கள், மனித குலத்திற்காகக் கொடுக்கப்பட்டுள்ள மிகச்சிறந்த பரிசான இயேசு கிறிஸ்துவை, சில நேரங்களில் மறந்து விடுகின்றனர்.

## கிறிஸ்துவின் பிறப்பு நமக்கு ஐந்து முக்கிய பரிசுகளை அளிக்கிறது:

### 1. நிறைவேற்றப்பட்ட வாக்குத்தத்தம் என்ற பரிசு!

கொடுக்கப்பட்டுள்ள வாக்குகளை நிறைவேற்றுபவர் நம் தேவன் என்பதை இயேசு கிறிஸ்துவின் பிறப்பு நமக்கு நினைவுப்படுத்துகிறது. அவர் சொல்வதைச் செய்கிறவர். அவர் மனிதனைப் போல பொய் சொல்லவோ, அல்லது தம் மனதை மாற்றுபவரோ இல்லை. வாக்குத்தத்தம் நிறைவேற காலம் ஆகலாம்; ஒரு வேளை சில சந்ததிகள் கூட கடந்து போகலாம். ஆனால் அவரது வாக்கு என்றைக்கும் நிலைக்கும். **வானமும், பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை.** மத்தேயு 24:35 என்று வேதத்தில் வாசிக்கிறோம். இருப்பினும், ஒரு சில



நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்!

வாரங்கள் அல்லது மாதங்கள் அல்லது வருடங்கள் கடந்து போனதும் நாம் எளிதில் வாக்குத்தத்தங்களை விட்டுவிடுகிறோம். தேவ வாக்குத்தத்தங்கள் நமது வாழ்க்கையிலோ அல்லது நமது பிள்ளைகளின் காலத்திலோ நிறைவேறும். யூத மக்களுக்கு ஒரு மேசியாவை தேவன் வாக்களித்தார். அவரை அவர்களுக்கு அனுப்பியும் கொடுத்தார்.

புதிய ஏற்பாட்டிலுள்ள 44 வாக்குத்தத்தங்கள் இயேசு கிறிஸ்துவின் பிறப்பில் நிறைவேறியுள்ளன என்று வேத பண்டிதர்கள் கூறுகின்றனர். உதாரணமாக, ஆதியாகமம் 3:15 இல் மேசியா ஒரு ஸ்திரீயின் மூலம் பிறப்பார் என்று தீர்க்கதரிசனமாக உரைக்கப் பட்டுள்ளது. இந்தத் தீர்க்கதரிசனம் மத்தேயு 1:20 இல் நிறைவேறியுள்ளது. அவர்

பிறக்கப்போகும் இடம் பற்றிய வாக்குத்தத்தம் மீகா 5:2 இலும், அது மத்தேயு 2:1 இலும் நிறைவேறியுள்ளது. எல்லா வாக்குத் தத்தங்களையும் என்னால் பட்டியலிட முடியும். அவையெல்லாம் நிறைவேறியுள்ளன. இவையெல்லாம் நிறைவேற தேவ மக்கள் பலகாலம் காத்திருக்க வேண்டியிருந்தது. இதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

எனக்கு அருமையான தேவ பிள்ளைகளே, தேவன் உங்களுக்கு எதையாகிலும் வாக்கு பண்ணியிருப்பாரானால், விசுவாசத்தில் தொடர்ந்து ஜெபியுங்கள். விட்டு விடாதீர்கள். நீங்கள் காற்றையோ, மழையையோ காணமாட்டீர்கள். ஆனால் உங்கள் பள்ளங்களெல்லாம் தண்ணீரால் நிரம்பும். இயேசு 'ஆம்' என்று சொல்லிவிட்டாரானால், வேறு ஒருவரும் 'இல்லை' என்று சொல்ல முடியாது. அவர் சொன்ன வாக்கைக் காப்பாற்றுபவர்! பற்றிக் கொள்ள எதுவும் இல்லையென்றாலும், உங்கள் விசுவாசத்தைப் பற்றிக் கொள்ளுங்கள். தேவன் சொன்னதை நிச்சயமாக நிறைவேற்றுவார்.'

வாக்குத்தத்த நிறைவேறுதலை நாம் கண்களால் பார்க்க முடியவில்லை என்றாலும், கிறிஸ்மஸ் நாட்களில், தேவன் நமக்காகக் கிரியை செய்து கொண்டிருக்கிறார் என்பதை நினைவுகூருவோம்.

கர்த்தருடைய நேரத்தில் அனைத்தும் அழகாக நிறைவேறும். அவருடைய நேரத்திற்காகக் காத்திருங்கள். அவரது நேரமே சிறந்த நேரம்! "கர்த்தரால் எல்லாம் கூடும்". எலிசபெத், மரியாள், சிமியோன், அன்னாள் போன்றவர்களைப் போல அர்ப்பணித்துக் காத்திருங்கள். இவர்கள் அனைவரும் காத்திருந்து, தேவ வாக்குத்தத்தம் நிறைவேறியதைக் கண்டார்கள்.

## 2. சமாதானம் என்ற பரிசு!

இரண்டாவதாக, தேவன் அருளும் பரிசு என்னவென்றால் சமாதானம் என்ற பரிசு. அவருடைய பெயர் 'சமாதானப்பிரபு' எனப்படும். நமது வாழ்வில் சமாதானம் மிகவும் முக்கியமானதாகும். ஆனால் அதைப் புரிந்துகொள்ளவோ, பெற்றுக் கொள்ளவோ, நமக்குத் தெரிவதில்லை. சமாதானம் இல்லாமல் எதுவும் அர்த்தமில்லாமல் போய்விடும். ஒரு மிகப்பெரிய வீடோ, விலையுயர்ந்த வாகனமோ, மிகப் பெரிய சம்பளம் அருளும் வேலையோ, வாழ்க்கைத் துணையின் வெகுமதியோ, செல்வந்தரான கணவரோ, தாலந்து மிக்க பிள்ளைகளோ இருந்தாலும், சமாதானம் இல்லையென்றால், நாம் பெற்றிருக்கும் எந்த செல்வத்தாலும் பிரயோஜனமிருக்காது.

ஒருமுறை ஒரு இளம் வாலிபனை நான் சந்தித்தேன். அவன் கூறியதைக் கேட்டபோது நான் அதிர்ச்சியடைந்தேன். அவன் கூறினான், "ஒரு சிறிய வீட்டில் சந்தோஷமாக வாழ்வதைக் காட்டிலும், ஒரு பெரிய வீட்டில் அழுதுகொண்டே வாழ்வது நல்லது." உண்மையிலேயே நான் அவனுக்காகப் பரிதாபப்பட்டேன்! இப்படிப்பட்ட சமுதாயத்தில்தான் வாழ்கிறோம். மக்களைக் கவரவே நாம் வாழ்கிறோம். நமது வெளிப்பிரகாரமான செல்வ செழிப்பைப் பார்த்து, நாம் வெற்றியாளர் என்றும் வல்லவரானவர்கள் என்றும் அவர்கள் நினைக்க வேண்டும் என்று விரும்புகிறோம். ஆனால் 'சமாதானம்' என்ற உள்ளான செல்வம் இருக்கிறதா?

இயேசு இவ்வாறாகக் கூறுகிறார்: "உனக்கு 10 இலக்க எண்ணிலுள்ள பணம் வங்கியில் இருந்தாலும் அல்லது ஒரு இலக்க பணமானாலும் உனக்கு குடும்பம் இருந்தாலும், இல்லாவிட்டாலும் நல்ல ஆரோக்கியமாக நீ இருந்தாலும் அல்லது உன் பணமெல்லாவற்றையும் மருத்துவர்களுக்குச் செலவு செய்து கொண்டிருந்தாலும், நீ ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும், வாலிபனாக இருந்தாலும் அல்லது முதிர்வயதினராக இருந்தாலும் – எப்படிப்பட்ட நிலையில் இருந்தாலும் பரவாயில்லை. நான் உனக்குக் கொடுக்கும் சமாதானம் எல்லாச் சூழ்நிலைக்கும் போதுமானதாக இருக்கும்". மத்தேயு11:28 இல் **வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்** என்று இயேசு கூறுகிறார். **... என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. ...** யோவான் 14:27 என்றும் இயேசு கூறியிருக்கிறார். தேவன் நமக்குக் கொடுக்கும் சமாதானம் நம் புத்திக்கும், கற்பனைக்கும் அப்பாற்பட்டது. கர்ஜித்துக் கொண்டிருந்த சிங்கங்களின் மத்தியிலும் தானியேல் பெற்ற சமாதானம் அத்தகையது. பற்றி எரிந்து கொண்டிருந்த அக்கினியின் மத்தியில் அந்த எபிரேய புருஷர்கள் அனுபவித்த சமாதானம் அது.

இயேசு கொடுக்கும் சமாதானத்திற்கு அளவே இல்லை. புயலின் மத்தியிலும் இயேசு அருளும் சமாதானத்தை நீங்கள் அனுபவிக்கலாம். ஏனென்றால், எல்லா சூழ்நிலைகளையும் அவரது ஆளுகைக் குள்ளாய் அவர் வைத்திருக்கிறார். தேவன் அறியாமல் ஒன்றும் நம்மைத் தொட முடியாது. அவர் நம்மை ஒருபோதும் கைவிட மாட்டார்.

அன்பு நண்பர்களே, உங்கள் வாழ்க்கையில் ஒரு வறண்ட காலத்தில் நீங்கள் காணப்படலாம். ஒருவேளை புயல் போன்ற சூழ்நிலையை நீங்கள் கடந்து போய்க் கொண்டிருக்கலாம். நானும் அப்படிப்பட்ட சூழ்நிலையில் ஒருமுறையோ, இரண்டு முறைகளோ அல்ல; பலமுறைகள் அவ்வாறான சூழ்நிலைகளில் இருந்திருக்கிறேன். இயேசு கிறிஸ்து நேற்றும், இன்றும், என்றும் மாறாதவராய் இருப்பதை நான் கண்டிருக்கிறேன்.

அவரது சமாதானத்தினாலே என்னை எப்போதும் நிறைக்கிறார். உங்கள் சூழ்நிலை எதுவாயிருந்தாலும், எப்படிப்பட்ட

தொடர்ச்சி 6-ம் பக்கம்.....


நெகேமியா வேதாகமக் கல்லூரி, சென்னை.

வேளச்சேரி – முழுநேரம் – இந்தி
சேப்பாக்கம் – மாலை நேரம் – தமிழ்
(திங்கள், செவ்வாய், வியாழன்)

Registered Candidate for Membership
Asia Theological Association (ATA)

உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 54 வருட அனுபவ ஸ்தாபனம்.

Certificate in Ministry
Diploma in Theology

கல்வித்தகுதி : 10ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்
உடனே அணுகவும் !

தொடர்புக்கு : போதகர் எஸ். சாம் செல்வ ராஜ், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org /இணையதளம் : www.echoofhiscall.org

# பிரதானக் கட்டளைப் பங்காளர்



## GREAT COMMISSION PARTNERS - PRAISE & PRAYER POINTS

**பகிர்தல்** (Share) (கலாத்தியர் 6:2), **உதவி செய்தல்** (Support) (ரோமர் 12:13) மற்றும் **துரிதப்படுத்துதல்** (Speed up) (II தீமோத்தேயு 1:6)

**துதி மற்றும் ஜெப குறிப்புகள் - 2023 டிசம்பர் 19 முதல் ஜனவரி 18 வரை**

(இப்பகுதியைப் பிரித்தெடுத்து, மடித்து, உங்கள் வேதாகமத்தினுள் வைத்து தொடர்ந்து ஜெபியுங்கள்)

## தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்

டிசம்பர் 19 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி, நெகேமியா வேதாகமக்கல்லூரி** மற்றும் **அஞ்சல்வழி வேதாகமக்கல்வி** மூலமாக ஏழை, எளிய மாணவர்கள் பயனடைந்து வருவதற்காக...

டிசம்பர் 20 ⇨ நமது மொழிப்பெயர்ப்பாளர்கள், இணை ஆசிரியர்கள், உதவியாளர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினர்களை ஆசீர்வதித்து வருகிறதற்காக...

டிசம்பர் 21 ⇨ நமது மிஷனரி ஊழியர்களின் பெரிதான அர்ப்பணிப்பிற்காக ...

டிசம்பர் 22 ⇨ நமது பணியாளர்கள் அனைவரது குடும்பத்தினர் மீதும் கர்த்தருடைய ஆசீர்வாதம் பொழியப்பட்டதற்காக...

டிசம்பர் 23 ⇨ நமது தலைமைப் போதகர் அவர்களையும், அவரது குடும்பத்தினரையும் எல்லாவித தீயசக்திகளிலிருந்தும் விலக்கிக் காத்துக் கொண்டதற்காக...

டிசம்பர் 24 ⇨ நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரியின்** 2023–2024ம் வருட கல்வியாண்டின் இரண்டாவது பருவத்தை வெற்றிகரமாக நிறைவடையச் செய்த கிருபைக்காக...

டிசம்பர் 25 ⇨ இவ்வருட அனைத்து கிறிஸ்மஸ் நிகழ்வுகளை ஆசீர்வதித்த கிருபைக்காக ...

டிசம்பர் 26 ⇨ 16 மொழி பத்திரிகைகளுக்குரிய அனைத்து பதிவுச் சான்றிதழ்களை (Registration Certificate) புதுப்பிக்கச் (கிடைக்கச்) செய்த கிருபைக்காக...

டிசம்பர் 27 ⇨ நமது ஜெபப்பங்காளர்கள், சந்தாதாரப் பங்காளர்கள், விசுவாசப் பங்காளர்கள், ஆயுள் பங்காளர்கள் மற்றும் பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் அனைவரையும், அவர்களது குடும்பத்தாரையும் கர்த்தர் ஆசீர்வதித்து வருகிறதற்காக ...

டிசம்பர் 28 ⇨ நமது **அஞ்சல்வழி இறையியல் கல்வி** மற்றும் **தொலைதொடர்பு வேதாகமக் கல்வி முறைகளின்** வளர்ச்சிகளுக்காக ...

டிசம்பர் 29 ⇨ நமது அச்சகத்திலேயே 16 மொழிகளில் அச்சடிக்கப்பட்டு எல்லா மிஷன் பணித்தளங்களுக்கும் அனுப்பப்படும் சுவிசேஷப் பிரசுரங்களை தேவன் ஆசீர்வதித்து வருவதற்காக ....

டிசம்பர் 30 ⇨ இவ்வருடம் முழுவதும் நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரிகள்** நன்கு நடைபெற்று வருவதற்காக...

டிசம்பர் 31 ⇨ 2023ம் வருடத்திற்கான அனைத்து தேவைகளையும் அற்புதமாக தேவன் சந்தித்த கிருபைக்காக...

ஜனவரி 01 ⇨ உலகமெங்குமுள்ள நமது வாசகர்களுக்கும், மக்களுக்கும் 2024ம் புத்தாண்டில் சமாதானத்தை அருளும் கிருபைக்காக...

ஜனவரி 02 ⇨ 2024ம் வருடத்திற்கான நல் வாக்குத்தத்தங்களை அனைத்து தேவாலயங்களுக்கும், விசுவாசிகளுக்கும் கொடுத்து ஆசீர்வதித்த கிருபைக்காக...

ஜனவரி 03 ⇨ 2024ம் வருடத்தில் அனைத்து கிறிஸ்தவ அமைப்புகளையும், தேவாலயங்களையும் ஆசீர்வதித்து வரும் கிருபைக்காக...

## தேவனிடத்தில் ஜெபியுங்கள்

ஜனவரி 04 ⇨ இளைஞர்கள் மத்தியில் கிரியை செய்யும் வன்முறை மற்றும் கொலைவெறி ஆவிகள் நீக்கப்பட்டு பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட...

ஜனவரி 05 ⇨ அனைத்து குடும்பங்களிலும் சமாதானம் நிலவ...

ஜனவரி 06 ⇨ உலகத் தலைவர்கள் அனைவரும் மக்களின் நலனை சிந்தித்து கர்த்தர் அருளிய ஞானத்துடன் செயல்பட ...

ஜனவரி 07 ⇨ உலக மக்களின் தனிமனித வருமானம் உயர்வதற்காக...

ஜனவரி 08 ⇨ உலகத்திலுள்ள கிறிஸ்தவ கல்வி நிறுவனங்கள் நற்கீர்த்தியுடன் என்றென்றும் நிலைத்திருக்க...

ஜனவரி 09 ⇨ கிறிஸ்தவர்கள் கர்த்தரின் வேதவசனத்தை பின்பற்றி, கிறிஸ்துவின் சாயலை அடைவதற்காக...

ஜனவரி 10 ⇨ உலக நாடுகளிடையே சமாதானம் நிலவி பொருளாதார மேம்பாடு அடைவதற்காக...

ஜனவரி 11 ⇨ 2024–ம் வருடத்திலும் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் மீது நன்மைக்கேதுவான கர்த்தரின் கரம் இருப்பதற்காக...

ஜனவரி 12 ⇨ கிறிஸ்தவ ஆலயங்களுக்கு எதிரான தீயசக்திகளிடமிருந்து தேவ பாதுகாப்பு கிடைப்பதற்காக...

ஜனவரி 13 ⇨ கிறிஸ்தவ சபைகள் மற்றும் அமைப்புகள் அனைத்தும் அரசு அங்கீகாரம் பெற்று செயல்பட...

ஜனவரி 14 ⇨ அலுவலகத்திற்கு தகுதியான புதிய பணியாளர்கள் நியமிக்கப்பட...

ஜனவரி 15 ⇨ நமது ஊழியத்தின் பங்காளர்கள் மற்றும் மாநில ஒருங்கிணைப்பாளர்களின் செயல்பாடுகள் வெற்றியடைவதற்காக...

ஜனவரி 16 ⇨ நமது தலைமைப் போதகரது சுயசரிதை எழுதும் செயல்பாடு வெற்றிகரமாக நிறைவடைந்திட...

ஜனவரி 17 ⇨ நமது ஊழிய விரிவாக்கம் மற்றும் உலகளாவிய சுவிசேஷ பிரபல்யத்திற்காகவும்...

ஜனவரி 18 ⇨ இந்த மாதத்தின் தேவைகள் அனைத்தும் கர்த்தரால் சந்திக்கப்பட...

... 4-ம் பக்கத் தொடர்ச்சி

நிலைமையில் நீங்கள் இருந்தாலும், எத்தகைய குழியிலிருந்தாலும், அந்த கோலியாத்தைப் போல எத்தகைய பிரச்சனையை நீங்கள் சந்தித்தாலும் அவரது சமாதானம் உங்களுக்கு கிடைக்கும்படி அவரிடம் கேளுங்கள். இயேசு கிறிஸ்து சமாதானப் பிரபுவாய் இருப்பதினால், அவர் உங்களுக்கு **சமாதானம்** அருளுவார்.

முதல் கிறிஸ்மஸ் மிகப்பெரிய சமாதானம் நிறைந்த கொண்டாட்டமாக இருக்கவில்லை என்று நீங்கள் அறிவீர்களா? இயேசு கிறிஸ்துவின் பிறப்பைக் குறித்து கேள்விப்பட்டதுமே ஒரு சிலர் பயந்து அலறினார்கள். அவர்கள் குழப்பமடைந்தார்கள். அவ்வாறு பயந்த, ஆனால் விசுவாசமுள்ள மக்கள், இயேசு பிறந்த நற்செய்தியைக் கேட்டு விசுவாசித்த மக்கள், மிகுந்த சந்தோஷமடையத் தொடங்கினார்கள். அந்த மேய்ப்பர்கள் முன் தோன்றிய தூதன், ... **பயப்படாதிருங்கள்; இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்** லூக்கா 2:10 என்றான். அதைக் கேட்ட மக்கள் சாதாரண விசுவாசம் கொண்ட எளிமையான மக்கள்.

ஆனால், ஒரு முக்கியமான காரியம் நமது சமாதானத்தைத் தடுத்து குழப்பிவிடும். அது வெறுப்பும், மன்னிக்காத மனநிலையும் தான்.

ஒரு கவிதை எனக்கு ஞாபகத்தில் வருகிறது.

### விஷ மரம்!

*(வில்லியம் ப்ளேக்)*

*என் நண்பன்மேல் கோபமாயிருந்தேன்;*
*என் கோபத்தைக் கூறிவிட்டேன், என் கோபம் முடிவுக்கு வந்தது.*
*என் எதிரியின்மேல் கோபமாயிருந்தேன்;*
*அவனிடத்தில் அதைக் கூறவில்லை, என் கோபம் வளர்ந்தது.*
*என் பயங்களால் அதற்கு நீர் பாய்ச்சினேன்,*
*இரவும் பகலும் கண்ணீர் சிந்தினேன்.*
*வெளியேயோ புன்னகையுடன் காணப்பட்டேன்.*
*உள்ளத்தில் மென்மையான வஞ்சனையான தந்திரங்கள் இருந்தன.*
*அது இரவும் பகலும் வளர்ந்தது.*
*இறுதியில் பளபளவென்ற பழம் பழுத்தது.*
*அது பளபளத்ததை என் எதிரி கண்டான்,*
*அந்த பழம் என்னுடையது என்று அறிந்தான்.*
*கள்ளத்தனமாய் அவன் என் தோட்டத்தில் புகுந்தான்,*
*இரவின் இருளில் அவன் வந்தான்,*
*காலையில் மகிழ்ச்சியுடன் நான் கண்ட காட்சி;*
*என் எதிரி அம்மரத்தடியில் மாண்டு கிடந்தான்.*

நாம் மன்னித்து முன்னேறிச் செல்ல வேண்டும். அப்போதுதான் நாம் சமாதானத்தை அடைய முடியும். நம் இருதயங்களில் மன்னிக்க முடியாத குணம் இருக்குமானால், சமாதானம் நழுவிப் போய்விடும். மனிதர்கள் நமக்குத் தீங்கு விளைவித்திருக்கலாம்; ஆழமான காயம் உண்டாக்கியிருக்கலாம்; வேதனை கொடுத்திருக்கலாம்; முதுகில் குத்தியிருக்கலாம். கர்த்தர் அவர்களைப் பார்த்துக் கொள்ள விட்டுவிடுங்கள்.

ஒருவேளை யாரையோ உங்கள் வாழ்வில் நீங்கள் மன்னிக்க வேண்டியிருக்கலாம்; நேரம் வந்து விட்டது. உங்கள் கைபேசி மூலம் அவர்களுக்கு ஒப்புரவு செய்தி அனுப்புங்கள். இல்லாவிட்டால் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஒப்புரவு ஆகிவிடுங்கள். இதைச் செய்ய தேவன்தாமே உங்களுக்கு சமாதானம் அருள்வாராக!

## 3. அவரது பிரசன்னம் என்ற பரிசு!

தேவன் அருளும் மூன்றாவது பரிசுதான் அவரது பிரசன்னம், எத்தகைய அருமையான பரிசு? அவர் நாமம் 'இம்மானுவேல்' என்பதாகும். அதன் பொருள், 'தேவன் நம்மோடிருக்கிறார்' என்பதாகும். அவர் நம்மைவிட்டு விலகுவதுமில்லை. நம்மைக் கைவிடுவதுமில்லை. ... **உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலது பாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு**. சங்கீதம் 16:11. தாவீது ராஜாவுக்கு தனம், செல்வம், வல்லமை, ஜெயம் போன்றவைகள் இருந்தன. இருப்பினும், இவை அனைத்தையும்விட ஒரு காரியத்துக்காகவே அவர் ஏங்கினார். தனது மாளிகையை விட, தேவன் சமூகத்தில் இருப்பதையே அவர் மிகவும் விரும்பினார். தாவீது பாவம் செய்தபோது அவர் தன் பெயர் கெட்டுவிடுமே என்பதைவிட, பரிசுத்த ஆவியானவரின் சமூகம் தன்னை விட்டு போய்விடக் கூடாது என்று விரும்பினார். **உமது சமுகத்தைவிட்டு என்னைத் தள்ளாமலும், உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளாமலும் இரும்**. சங்கீதம் 51:11 என்று தாவீது எழுதியுள்ளார்.

இயேசு பரலோகம் செல்லும் முன்பதாக இவ்வாறு கூறினார்: ... **அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய**



**அவருடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தம்!**

**ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்** யோவான் 14:16 என்றார். இன்று நம்மை நாமே ஒரு கேள்வி கேட்டுக் கொள்வோமா? தேவ பிரசன்னம் என்ற பரிசை நம் வாழ்விலும், நம் குடும்பங்களிலும், நமது வீடுகளிலும், கணவன் – மனைவி உறவிலும் நாம் பெற்றிருக்கிறோமா? தேவ பிரசன்னத்திற்கு முன்னுரிமை கொடுக்கிறோமா அல்லது உலகத்தின் பரிசுகளுக்கு முன்னுரிமை கொடுக்கிறோமா? இந்த கிறிஸ்மஸ் பண்டிகை நாட்களில் இந்த கேள்வியை நம்மை நாமே கேட்க வேண்டிய அவசியம் உள்ளது.

## 4. தேவ வல்லமை என்ற பரிசு!

நமது சமாதானப்பிரபுவின் மற்றுமொரு இயற்கைக்கு அப்பாற்பட்ட பரிசு என்னவென்றால் அவரது ஆச்சரியமான வல்லமை. ஆதியாகமம் 3:15 இல் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தின் நிறைவுதான் இயேசு கிறிஸ்துவின் பிறப்பு. இரட்சகராம் இயேசுவைப் பற்றிய முதல் வாக்குத்தத்தம் இதுவே: **உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார்** ஆதியாகமம் 3:15.

சாத்தானுக்கும், மனித குலத்துக்கும் இடையே ஒரு நிரந்தர பகையை இந்த வசனம் விளக்குகிறது. இருப்பினும், சாத்தானின் ஒவ்வொரு வல்லமையையும்

தொடர்ச்சி 8-ம் பக்கம்.....

## நமது தலைமையக ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்

| | | |
|---|---|---|
| 1. ஜெப உதவி | – | 24 மணி நேரம் |
| 2. வேதாகமக் கடித முறைக் கல்வி | – | தமிழ், ஆங்கிலம், இந்தி |
| 3. அழைப்பின் எதிரொலி | – | பத்திரிகைகள் (16 மொழிகள்) |
| தமிழ், ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு, இந்தி, கன்னடம், மராத்தி, பெங்காளி, குஜராத்தி, ஒடியா, நேப்பாளி, அஸாமி, பஞ்சாபி, உருது, சிங்களம், ஆப்ரிகான்ஸ். | | |
| 4. நெகேமியா வேதாகமக் கல்லூரிகள் | – | (மூன்று இடங்களில்) மாலை நேரம் / முழு நேரம் |
| 5. அஞ்சல் வழி இறையியல் கல்வி (தமிழ் மற்றும் ஆங்கிலம்) | | |
| 6. பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் (ஊழியர் ஐக்கியம்) | | |
| 7. பயிற்சி வகுப்புகள் | | |
| 8. சுவிசேஷக் கூட்டங்கள் | | |
| 9. கைப்பிரதி வினியோகம் | – | தொடர் ஊழியம் |
| 10. சுவிசேஷ அச்சகம் | – | சுவிசேஷ பிரசுரங்கள் |
| 11. St. பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி | – | கிராம ஆங்கிலப் பள்ளி |
| 12. சிறுவர் வேத பாடசாலை | – | ஞாயிறு காலை 8.30 மணி மாலை 4.00 மணி |
| 13. தமிழ் ஆராதனைகள் | – | ஞாயிறு காலை 8.00 மணி & 10.00 மணி |
| 14. இந்தி ஆராதனை | – | ஞாயிறு மாலை 4.00 மணி |
| 15. தெலுங்கு ஆராதனை | – | ஞாயிறு மாலை 5.00 மணி |
| 16. தமிழ் – ஆங்கிலம் ஆராதனை | – | ஞாயிறு மாலை 6.00 மணி |
| 17. பெண்கள் ஆராதனை | – | புதன் மாலை 5.30 மணி |
| 18. ஆண்கள் ஆராதனை | – | வெள்ளி இரவு 7.00 மணி |
| 19. சீஷத்துவக் கூட்டம் | – | சனி மாலை 6.00 மணி |
| 20. வீட்டுக் கூட்டங்கள் | – | செவ்வாய், வியாழன் மாலை 6.30 மணி |
| 21. விசேஷ திருவிருந்து | – | பிரதி மாதம் முதல் நாள் காலை 6.00 மணி |
| 22. ஊழியர்கள் கூடுகை | – | முதல் சனிக்கிழமை மாலை 5.30 மணி |
| 23. பெற்றோர் ஜெபம் | – | முதல் ஞாயிறு மாலை 4. 00 மணி |
| 24. இரவு ஜெபம் | – | 2–ம் வெள்ளி இரவு 9.30 மணி |
| 25. உபவாச ஜெபம் | – | மூன்றாம் சனிக்கிழமை காலை 9.30 மணி |
| 26. திருவிருந்து | – | 2–ம் ஞாயிறு ஆராதனைகள் |
| 27. வாலிபர் / சிறுவருக்கான ஜெபம் | – | தினமும் இரவு 10.00 மணி |
| 28. பணியாளர் ஜெபம் | – | தினமும் காலை 9.00 மணி |
| 29. அலுவலகம் | – | தினமும் காலை 9.00 முதல் இரவு 9.00 வரை (ஞாயிறு தவிர) |

# அழைப்பின் எதிரொலி தபால் வழிக் கல்வி

### இந்திய மாணாக்கர்களுக்கு மட்டும்

## I. வேதாகமத் தபால் கல்வி

தபால் மூலம் வேதத்தின் உண்மைகளையும், தமிழ், ஆங்கிலம், இந்தி மொழிகளில் கற்க ஓர் அரிய வாய்ப்பு. வயது வரம்பு இல்லை. கல்வித் தகுதி தேவையில்லை. கட்டாயக் கட்டணம் எதுவும் இல்லை.



"புதுவாழ்வு – உமக்கு" என்ற நல்ல புத்தகத்தையும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகம் ஆங்கிலம் – 54 பக்கங்கள், இந்தி – 76 பக்கங்கள், தமிழ் – 96 பக்கங்கள் கொண்டது. சான்றிதழ் வழங்கப்படும்.

## II. அஞ்சல் வழி இறையியல் கல்வி




ஆழமான ஆவிக்குரிய சத்தியங்களை 149 தொகுப்புகள், ஆங்கிலம் – 537 பக்கங்கள் மற்றும் தமிழ் – 652 பக்கங்கள் கொண்ட 7 புத்தக வடிவில் பெற்று முழுவதும் படித்த பின்னர் ஊழிய சான்றிதழ் பெறமுடியும். இதற்கு மொத்த கட்டணம்

**ரூ.1000/– மட்டுமே.**

மேலும் விவரங்களுக்கு :



தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி
10, முகமது அப்துல்லா 2-வது தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005.
தொலைபேசி: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766
கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்அஞ்சல்: biblecor@yahoo.co.in

## அழைப்பின்எதிரொலி பத்திரிகையை

### இலவசமாய்ப் பெற்றிட ஓர் நல் வாய்ப்பு

உங்கள் / உறவினர் / நண்பர்கள் முகவரி மற்றும் கைபேசி எண்ணை தபால் / கடிதம் / வாட்ஸ் அப் மூலமாக தெளிவாக **அழைப்பின் எதிரொலி** அலுவலகத்திற்கோ, அலுவலக செல்போனுக்கோ அனுப்பினால் உங்களுக்கு / உறவினர்களுக்கு / நண்பர்களுக்கு இலவசமாக **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை அனுப்பி வைக்கப்படும். தேவனுக்கான இச்சேவை முற்றிலும் இலவசமானது! தேவனின் அருளை பெற வாரீர்!!

## வருமான வரி விலக்கு

இந்திய வருமான வரிச்சட்டம் பிரிவு 80G–கீழ் ஏழை, எளியோருக்கு மருத்துவம் மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கான உதவி செய்வதற்காக "அழைப்பின் எதிரொலி" அறக்கட்டளைக்குத் தனிநபர் மற்றும் ஸ்தாபனங்கள் தரும் நன்கொடைகள் வருமான வரிச்சட்டப் பிரிவு 80G–யின் கீழ் வரிவிலக்குப் பெறத் தகுதியுடையவை. வருமான வரிக் கணக்குகளுக்கான அலுவலக இரசீது நம் அலுவலகத்திலிருந்து வழங்கப்படும். அப்படிப்பட்ட நன்கொடைகளுக்கான பணவிடைத்தாள்களை (Demand Drafts) "Echo of His Call Educational Trust" என்ற பெயருக்கு எடுத்து அனுப்பும்போது **ஆதார் மற்றும் பான் (PAN) நம்பர்களை தெரியப்படுத்தி வருமானவரி விலக்கு பெறுங்கள்.** மேலும் விபரம் வேண்டுவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| Account Name | : ECHO OF HIS CALL EDUCATIONAL TRUST |
| Account Number | : 1023 2923 805 |
| Bank Name | : STATE BANK OF INDIA |
| Branch | : TRIPLICANE, CHENNAI - 600 005 |
| IFSC Code | : SBIN 0000249 |
| SWIFT Code | : SBI NIN BB 455 |



# ஆழக்குழியிலிருந்து அரண்மனைக்கு!

# PIT TO PALACE

(போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள்)

வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன் (மத்தேயு 24:15)

## ஜெபத்தை கேட்டு பதிலளிக்கும் தேவன்!

## THE LORD HEARS AND DELIVERS!

*நீதிமான்கள் கூப்பிடும்போது கர்த்தர் கேட்டு, அவர்களை அவர்களுடைய எல்லா உபத்திரவங்களுக்கும் நீங்கலாக்கிவிடுகிறார். சங்கீதம் 34;17*


எனது ஊழிய வாழ்க்கையின் ஆரம்ப நாட்களில், நான் மிக எளிய வாழ்க்கை முறையையே கடைபிடித்தேன். ஏனென்றால் எனது குறைந்த வருமானத்திலிருந்துதான் எனது ஊழியத்தின் தேவைகள் அனைத்தையும் சந்திக்க வேண்டியதாயிருந்தது.

ஒரு நாள் காலை, மறைந்த எனது தலைமைப் போதகரான பாஸ்டர் G. சுந்தரம் அவர்கள் அடுத்த ஞாயிறு ஒரு விசேஷ கூட்டமொன்று 'பெரியார் திடல்' என்ற மிகப்பெரிய இடத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என்று அறிவித்தார்கள். அப்பொழுது செருப்புகளை அடுக்கி வைக்கும் இடத்தைப் பராமரிக்கும் ஊழியம் எனக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. நான் எனக்கிருந்த ஒரே ஒரு நல்ல துணியைச் சலவை செய்து அந்த ஞாயிறு அணிய தயார் செய்தேன்.

அதற்கு முந்தின வெள்ளிக்கிழமை ஒரு வாலிபர் என்னைச் சந்திக்க வந்து அவர் தம்மை என் நண்பனின் சகோதரன் என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். என்னோடு 2 நாட்கள் தங்க அனுமதி கேட்டார். நானும் சந்தோஷமாய் ஒத்துக்கொண்டேன். என்னுடைய பழைய நண்பரின் சகோதரனுக்கு உதவ வாய்ப்பு எனக்குக் கிடைத்ததற்காகச் சந்தோஷமடைந்தேன்.

ஆனால் எதிர்பாராத விதமாக, அடுத்த நாள் சனிக்கிழமை காலையில் நான் வெளியே சென்றிருந்தபோது என்னுடைய எல்லா பழைய துணிகளையும், ஞாயிறு ஆராதனைக்கு அணிய நான் வைத்திருந்த துணியையும், இன்னும் சில பொருட்களையும் எடுத்துக்கொண்டு அவ்விடம் விட்டு ஓடி விட்டார். என்னுடைய எல்லாத் துணிகளையும் பொருட்களையும் இழந்து நின்றேன்.

எனக்கே என்னைப் பார்த்து பரிதாபமாயிருந்தது. அடுத்த நாள் ஞாயிறு ஆராதனைக்குப் பயன்படுத்த எந்த துணியும் இல்லை. அதை வாங்க பணமும் இல்லை. துணிகளை சுத்தமாகவும், ஒழுங்காகவும் அணிய வேண்டும் என்பதில் மிகவும் கண்டிப்பாய் எனது தலைமைப் போதகர் இருந்ததால், நான் எப்படி அழுக்கான உடையுடன் ஆலயத்துக்குச் சென்று செருப்புகளைப் பாதுகாக்கும் பணியைச் செய்ய முடியும் என கலங்கினேன். இந்நிலையில் வேறொரு புதிய ஆடை வாங்கப் பணம் தரும்படி தேவனிடம் ஜெபித்தேன். எனக்கு விசுவாசம் சற்றே குறைவாயிருந்தாலும், அந்த சனிக்கிழமை மாலையில், தேவன் ஒரு அற்புதம் நடக்க அவரை நம்புவதைத் தவிர வேறு வழி எனக்குத் தெரியவில்லை.



திடீரென்று யாரோ என்னை வீட்டின் வெளியிலிருந்து கூப்பிட்டார்கள். நான் வெளியே சென்று அவரை உள்ளே அழைத்தேன். அவர் ஒரு பை நிறைய வெள்ளை நிற ஆடைகளை என்னிடம் கொடுத்து "அன்பு சகோதரன் சாம், வெளிநாட்டிலிருந்து, ஆறு மாதங்களுக்கு முன் எனது உறவினர் இந்த பாண்ட், சர்ட்டுகளை எனக்கு வாங்கி வந்தார், ஆனால் அவை எனக்குப் பொருந்தாததால் இதை உமக்குத் தர விரும்புகிறேன். இவை உமக்கு சரியாகப் பொருந்தும்," என்றார். நான் மிகுந்த சந்தோஷமடைந்தேன். என் இருதயம் தேவனுக்கு நன்றியால் நிறைந்தது. அந்த ஆடைகள் மிக விலையுயர்ந்த வெளிநாட்டுத் துணிகளால் என் சரீரத்திற்கு ஏற்றவாறு தைக்கப்பட்டிருந்தது.

அடுத்த நாள் அதில் ஒரு ஜோடி ஆடையை நான் அணிந்து ஆலயத்திற்குச் சென்றேன். என்னுடைய தலைமைப் போதகர் என்னை மேலும் கீழும் பார்த்து "சகோ. சாம், இன்று நீங்கள் அருமையாய் ஆடை அணிந்திருக்கிறீர்கள்," என்றார். அப்பொழுது எனக்கு நேரிட்டதை விளக்கி தேவன் எனக்கு செய்ததையும் கூறினேன். அவரும் ஆச்சரியப்பட்டு என்னைத் தட்டிக் கொடுத்து அவருக்கே உரிய பாணியில் தெய்வீக புன்னகை பூத்தார்.

**"நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும், கர்த்தர் அவைகளெல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார்"** (சங்கீதம் 34: 19). இது உண்மை.

*******

... 6-ம் பக்கத் தொடர்ச்சி

இயேசுவின் பிறப்பு நொறுக்கி விட்டது. தேவ திட்டத்தை திசை திருப்பவும், தேவனது அநாதி நோக்கத்தை அழிக்கவும் சாத்தான் முயன்று, அநேக குழந்தைகளைக் கொல்ல திட்டமிட்டான். சாத்தானின் முயற்சி வீணாய்ப் போயிற்று. தேவ திட்டத்தை அழிக்க முடியாது. அன்பு பிள்ளைகளே, உங்களிலும் என்னிலும் தேவன் கொண்டுள்ள நோக்கத்தை யாராலும் அழிக்க முடியாது. உங்களின் இன்றைய சூழ்நிலை எதிர்மாறாய்த் தோன்றினாலும், ... **ஆண்டவர் உயரமும் உன்னதமுமான சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கக்கண்டேன்; ...** என்று ஏசாயா 6:1இல் குறிப்பிட்டுள்ளதை நினைவு கொள்ளுங்கள். நமது ஆண்டவர் ஆளுகை செய்கிறார்! இறுதி அதிகாரம் நம் ஆண்டவரிடத்தில்தான் உள்ளது. தேவன் நம் அடிகளை வழிநடத்தி, கடலின் அலைகளுக்கு எல்லையை ஏற்படுத்தி, அவை எல்லை தாண்டி வராதபடி கட்டளையிடுகிறார். "எனது நோக்கம் நிலைநிற்கும்," என்று தேவன் அறிவிக்கிறார். நம் தேவன் தமது வல்லமையில் சிறந்தவரும், மகத்துவமும் ஆனவர்!

நாம் நமது சூழ்நிலைகள் எல்லாவற்றிலும் ஜெயித்து வெற்றியாளர்களாய் இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். நமது தோல்விகள், பாவங்கள், சாபங்கள் மற்றும் சாத்தானையே நாம்

ஜெயிக்க விரும்புகிறார். எனவே சோர்ந்து போய் விட்டு விடாதீர்கள்! நாம் ஜெயத்தின் மேல் ஜெயம் கொள்பவர்கள் என்று 'கிறிஸ்மஸ்' நமக்கு நினைப்பூட்டுகிறது. எலிசபெத் சாபத்தை மேற்கொண்டார்கள்; மரியாள் சமுதாயத்தில் காணப்பட்ட களங்கத்தை மேற்கொண்டார்கள், பாவத்தையும் சாத்தானையும் மனித குலம் மேற்கொண்டது.

இன்னும் எதற்கு காத்திருக்கிறீர்கள்? நாம் முற்றும் ஜெயங்கொள்கிறவர்கள்!

## 5. மன்னிப்பு என்ற பரிசு!

தேவன் இவ்வுலகத்தை சிருஷ்டித்தபோது, அது நல்லதென்றும், அழகானதென்றும், குறைவற்றது என்றும் கண்டார். கீழ்ப்படியாமையின் மூலம் பாவம் உள்ளே நுழைந்ததும் எல்லாமே மாறி விட்டது.

பாவம் நுழைந்ததும், மனித குலம் அந்த பாவத்தையும் அதின் விளைவுகளையும் மேற்கொள்ள போராடிக் கொண்டேயிருக்கிறது. **பாவத்தின் சம்பளம் மரணம் ...** ரோமர் 6:23 என்று வேதம் சொல்கிறது. அப்படியென்றால் என்ன? நமது பாவ கிரியைகளின் விளைவுகள் சரீர மரணத்தை மட்டும் கொண்டு வராமல், ஆவிக்குரிய மரணத்தையும் கொண்டு வருகிறது. பாவம், தேவனிடத்திலிருந்து நம்மைப் பிரித்து, நமக்கும் அவருக்கு மிடையே பெரிய பிளவை ஏற்படுத்தியுள்ளது. இருப்பினும் இயேசு கிறிஸ்துவின் பிறப்பு இந்த பிரிவினைக்கு ஒரு முற்றுப் புள்ளியை வைத்து விட்டது. இயேசு இவ்வுலகத்திற்கு வந்தபோது, நம் பாவங்களுக்காக அவர்



ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் மன்னிப்பு!

மரித்து, நமக்கு வரவேண்டிய தண்டனையை அவர் ஏற்றுக் கொள்வதே அவரது நோக்கமாயிருந்தது. அவ்வாறு அவர் சிலுவையில் மரித்ததினால், 'கிருபை' என்ற சிறப்பு பரிசை நமக்கு அளித்தார். கிருபையின் வடிவத்தில் நம்மை நோக்கி வரும் புனிதமான, சுயநலமற்ற தேவ அன்பை நினைவுகூரும் காலம்தான் கிறிஸ்மஸ் காலம். மேலும், ரோமர் 8:34இல் குறிப்பிட்டுள்ளபடி இயேசு நமக்காகப் பிதாவிடம் வேண்டிக் கொண்டிருக்கிறார். கிருபையினால் மூடப்படாத எந்த பெரிய பாவமும் இல்லை, கிருபையினால் சரி செய்யப்படாத எந்த சிறிய பாவமும் இல்லை என்பதை நாம் முக்கியமாக நினைவு கொள்ள வேண்டும்.

எனதருமை நண்பர்களே! இவ்வுலகம் தரும் அழுத்தங்களும், ஒவ்வொரு நாளின் பணிச்சுமைகளும், நாம் அன்றாடம் சந்திக்கும் சவால்களும் நம்மை தேவனை விட்டு தூரம் கொண்டு சென்று விடும். ஒருவேளை நீங்கள் தேவனிடத்திலிருந்து அதிகமாய் தள்ளிப்போயிருப்பீர்களானால், அவரிடம் திரும்பிச் செல்ல இதுவே சிறந்த தருணம்.

இயேசு நம்மை நேசிக்கிறார்; நம்மை மன்னிக்க ஆயத்தமாயிருக்கிறார். அவரோடு தனிப்பட்ட உறவை நாம் வைத்துக் கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுகிறார்.

அன்பு நண்பர்களே! இந்த கிறிஸ்மஸ் உங்களுக்கு அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன்.

சமாதானப்பிரபு அளிக்கும் ஐந்து பரிசுகளையும் நீங்கள் பெற்று அனுபவிக்க விரும்புகிறேன். நம் இயேசு கிறிஸ்து வாக்குத்தத்தங்களை நிறைவேற்ற வல்லவர் என்பதை நீங்கள் எப்போதும் நினைக்க வேண்டுமென்று ஜெபிக்கிறேன். அவரது வாக்கு நிறைவேற காலம் தாமதிக்கலாம். அவர் சமாதானம் அருளுபவர். புயலின் மத்தியிலும் அவர் தரும் சமாதானத்தை உணரலாம். அவரது பிரசன்னத்தை நாம் காணவோ, தொடவோ முடியாவிட்டாலும், அது எப்போதும் நம்மோடு இருக்கிறது. நம் கடைசி மூச்சு வரை அவர் நம்மோடு இருப்பார். அவர் மிகவும் வல்லமை மிக்கவர். ஆதலால் நாம் பயப்படத் தேவையில்லை. அவர் நம்மை வெற்றியாளராக மட்டும் ஆக்குவதில்லை; வெற்றிமேல் வெற்றி சிறப்பவராக நம்மை மாற்றுகிறார். இறுதியாக, நீங்கள் இருக்கும் வண்ணமாகவே உங்களை ஏற்றுக்கொண்டு, உங்களைத் தம் கைகளில் அணைத்துக் கொள்ளக் காத்துக் கொண்டிருக்கிறார்.

சமாதானப்பிரபுவாம் இயேசு கிறிஸ்து அருளும் ஐந்து பரிசுகளையும் நீங்கள் ஏற்றுக் கொண்டால், கிறிஸ்மஸ் என்பதன் உண்மையான அர்த்தத்தைப் புரிந்துகொள்வீர்கள்!

உங்கள் அனைவருக்கும் மிக சந்தோஷமான ஆசீர்வதிக்கப்பட்ட மகிழ்ச்சியும், அர்த்தமுமுள்ள கிறிஸ்மஸ் உண்டாகட்டும் என்று வாழ்த்துகிறேன்.

************

## தேவை

**சென்னை – அழைப்பின் எதிரொலியின் நெகேமியா வேதாகமக் கல்லூரி**
(ATA Candidate)

1. **DEAN (Residential):** அனுபவத்துடன் கூடிய இந்தி இறையியலாளர் (Hindi Theologian) M.Div. / M.Th.
2. **VICE-PRINCIPAL:** அனுபவத்துடன் கூடிய ஆங்கிலம் / தமிழ் / இந்தி இறையியலாளர் M.Div. / M.Th. & experience.
3. **CO-ORDINATOR:** கம்ப்யூட்டர் தெரிந்த மற்றும் ஆங்கிலம், தமிழ் & இந்தி தட்டச்சு திறமையுள்ள ஒருங்கிணைப்பாளர்.

தகுதியுள்ளவர்கள் தங்களது விண்ணப்பத்தை (Bio-Data) அனுப்ப வேண்டிய முகவரி:
E.mail: sam@echoofhiscall.org
WhatsApp: (+91) 98410 71858

## தேவை நூலகப் புத்தகங்கள்

நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளிக்கும், நெகேமியா வேதாகமக் கல்லூரிக்கும்** உள்ள தனித்தனி நூலகங்களுக்கு ஆங்கிலம் மற்றும் தமிழ் புத்தகங்கள் (Library Books) தேவைப் படுகின்றன. பழைய அல்லது புதிய புத்தகங்களை நல்ல நிலையில் வைத்திருப்பவர்கள் அவற்றை எங்களுக்கு வழங்க விரும்பினால் தயவு செய்து எங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

**– எஸ். சாம் செல்வ ராஜ், ஆசிரியர்**
**+91-98412 71858**

RNI NO. 67380/93. Postal Regn. No. TN/CH/(C)/197/21-23 WPP NO. TN/PMG(CCR)/WPP-158/21-23

## இந்தி புத்தகங்கள் தேவை

நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரிகளுக்காக** 1000 இந்தி கிறிஸ்தவ புத்தகங்கள் தேவைப்படுகின்றன. இந்தி வேதாகம புத்தகங்களை (Theological Books) சேகரிப்பதற்கான சாத்தியக் கூறுகளை தயவு செய்து எங்களுக்குத் தெரிவிக்கவும்.

**– எஸ். சாம் செல்வ ராஜ், ஆசிரியர்**
**+91-98412 71858**

## OUR BANK DETAILS:

### *1. Bank : State Bank of India*

Branch : **Triplicane, Chennai-5**
Name : **S. Sam Selva Raj**
A/C No. : **1023 2934 679**
IFSC : **SBIN 00 00 249**
SWIFT CODE : **SBI NIN BB 455**

### *2. Bank : ICICI Bank*

Branch : **Anna Salai, Chennai-6**
Name : **Echo of His Call**
A/C No. : **6038 0502 2319**
IFSC : **ICIC 000 6038**

### *3. Bank : State Bank of India*

**(This Account is for Tax Exemption for Indians only )**

Branch : **Triplicane, Chennai-5**
Name : **Echo of His Call Educational Trust**
A/C No. : **1023 2923 805**
IFSC : **SBIN 00 00 249**

**Google Pay: 98410 71858**
**PayPal : SAM SELVA RAJ**
*****
E.mail : sam@echoofhiscall.org

## அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்

**மாதப் பத்திரிகை 16 மொழிகளில், வேதாகமக் கல்லூரிகள், தபால் வழிக் கல்விகள், சபைகளை ஸ்தாபித்தல், கிராம ஆங்கில உயர்நிலைப் பள்ளி, சுவிசேஷ அச்சகம், சுவிசேஷம், கருத்தாய்வுகள், சமூக சேவைகள் மற்றும் ஏனைய செயல்பாடுகள்**

**❊ வருட சந்தா ரூ. 100/– ❊ ஆயுள் சந்தா ரூ. 2000/–**

☞ **அழைப்பின் எதிரொலி** ஊழியத்தின் பல்வேறு ஊழியங்கள், நமது பங்காளர்களால் அளிக்கப்படும் சுயவிருப்பக் காணிக்கை மற்றும் நன்கொடைகளினால் நடைபெற்று வருகின்றன. தேவன் உங்கள் உள்ளத்தில் அளித்த விருப்பத்தின்படி நமது ஊழியங்களைத் தாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம். சுவிசேஷம் சென்றடையாத இடங்களில் சுவிசேஷத்தினை கொண்டு சேர்த்திட மற்றும் சபைகள் ஸ்தாபிக்கப்பட உங்கள் உதவி எங்களுக்கு தேவை.

☞ உங்கள் விலாசம் அல்லது மின்னஞ்சல் மாறினால், உங்கள் பழைய விலாசத்தையும் புதிய விலாசத்தையும், புதிய மின்னஞ்சலையும், உங்கள் பதிவு எண்ணையும் உடனே எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை உங்களுக்குத் தவறாமல் கிடைக்க வேண்டுமானால் எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள்.

☞ நம் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகள் 16 மொழிகளிலும் நமது இணையதளங்களில் (Websites) வெளியாகின்றன. அவற்றிலிருந்து படித்தும், பதிவிறக்கம் செய்தும் பயன்பெறுங்கள்.

☞ உங்கள் கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள், காணிக்கைகள் முதலியவற்றை காசோலை (Cheque), மணிஆர்டர் (M.O.) அல்லது டிமாண்ட் டிராப்ட் (D.D.) **NEFT, PayPal (Sam Selva Raj, sam@echoofhiscall.org) PhonePe (98410 71858), Gpay (98410 71858), Western Union, MoneyGram, etc.** மூலம் **Echo of His Call** என்ற பெயரில் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்புங்கள். Online மூலமாகவும் அனுப்பலாம்.

☞ உங்கள் E.mail முகவரி மற்றும் செல்போன் / தொலைபேசி எண்களை எங்களுக்கு அனுப்புங்கள். தேவைப்படும்போது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை E.mail மூலம் அனுப்ப உதவியாக இருக்கும்.

**சகோதர, சகோதரிகளே எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.** 1 தெசலோனிக்கேயர் 5:25.

**அழைப்பின் எதிரொலி,**
**10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.**
தொலைபேசி : (+91 – 44) 2852 8282, 2852 9293, 2854 7766 செல்: (+91) 98410 71852, 95661 31858
**E.mails : sam@echoofhiscall.org / biblecor@yahoo.co.in**
**Websites : www.echoofhiscall.org / www.stpaulsmatriculation.com**

**YOU CAN SEND YOUR DONATION ONLINE ALSO**

**Regd. with the RNI under No. 67380/93**
**Licenced to post without pre-payment**
**Postal Regn. No. TN/CH/(C)/197/21-23**
**Licence No. WPP - TN/PMG(CCR)/WPP-158/2021-23**
**Date of Publication: last week of previous month**
**Date of Posting : 27th & 28th of previous month**
**Posted at "Egmore RMS / 1 Patrika Channel"**
**on 28th NOVEMBER 2023**
**If un-delivered please return to:**
**ECHO OF HIS CALL (TAMIL)**
**P.O. Box No. 2957, Chepauk, Chennai - 600 005, INDIA.**
**Phone: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766**

*JESUS LOVES YOU!*

**To**

*GOD BLESS YOU!*

Owned and published by **S. Sam Selva Raj** from New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005 and printed by **S. Sam Selva Raj** at **Echo of His Call Printers,** New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005. Editor: **S. Sam Selva Raj.**